# இந்தியாவின் 3வது பாரிய விமான விபத்து

இந்தியாவின் தென் மாநிலங்களில் ஒன்றான் மங்களூரில் கடந்த சனிக்கிழமை நடந்த விமான விபத்து, கடந்த 50 ஆண்டுகளில் இந்தியாவில் நடந்த 3வது பெரிய விமான விபத்தெனத் தெரிவிக்கப்படுகின்றது. துபாயில் இருந்து வந்த 'எயார் இந்தியா எக்ஸ்பிரஸ்' நிறுவன விமானம் மங்களூர் விமான நிலையத்தில் தரை இறங்கும்போது ஓடுபாதையை தாண்டி பள்ளத்தாக்கில் சென்று விழுந்த விமானம் வெடித்து தீப்பிடித்ததில் 158 பேர் பலியானார்கள். 8 பேர் மட்டும் விமானம் வெடித்தபோது ஏற்பட்ட இடைவெளிக்குள்ளால் குதித்து வெளியே வந்து உயிர் தப்பியுள்ளனர்.

இதற்கு முன்னதாக, 1996ம் ஆண்டு ஹரியானா மாநிலத்தில் வானில் சவூதி அரேபிய விமானமும், கஜகஸ்தான் நாட்டு விமானமும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் அதில் பயணம் செய்த 349 பேர் பலியானார்கள். முன்னதாக, 1978ம் ஆண்டு ஜனவரி 1ம் திகதி எயார் இந்தியா விமானம் ஒன்று 213 பேருடன் அரபிக் கடலில் விழுந்து விபத்துக்குள்ளானதில் அதிலிருந்த 213 பேரும் உயிரிழந்தனர். இதன் பின்னர் அதிகளவான உயிரிழப்புக்களை ஏற்படுத்திய விமான



விபத்தாக மங்களூர் விமான விபத்து கருதப்படுகின்றது.

இந்த விமானம் விபத்துக்குள்ளானதற்கு விமானியின் தவறா அல்லது தொழில்நுட்பமா காரணம் என்று கண்டறிவதற்கான விசாரணைகள் முடக்கிவிடப்பட்டுள்ளன.

இந்த விபத்து குறித்து சிவில் விமான போக்குவரத்து இயக்குனரகம் விசாரணை நடத்தி வருகிறது. இதற்காக மங்களூரில் நிபுணர்கள் குழு முகாமிட்டுள்ளது. இதற்கென அமெரிக்காவில் இருந்து சிறப்புக் குழுவினரும் வரவழைக்கப்பட்டுள்ளனர். விமான விபத்து தொடர்பாக விசாரித்து வரும் உள்நாட்டு விமான போக்குவரத்து துறை ஆணையத்திற்கு இந்த நிபுணர் குழுவினர் உதவுவார்கள். அமெரிக்க போக்குவரத்து பாதுகாப்பு குழுவின் தலைவர் டிபோரா ஏ.பி. ஹெர்ஷ்மென், வான்வெளி பாதுகாப்பு ஆய்வாளர் ஜோ செடோர் ஆகியோர் அமெரிக்க குழுவில் இடம் பெற்றுள்ளனர். இந்த குழுவில் போயிங் விமான நிறுவனத்தின் நிபுணர்களும் அடங்கியுள்ளனர். விபத்து தொடர்பான விசாரணையை இந்திய உள்நாட்டு விமான போக்குவரத்து ஆணையம் நடத்துகிறது. விசாரணை தொடர்பான தகவல்களை அந்த அமைப்பே வெளியிடும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விமானத்தின் கறுப்புப் பெட்டி உள்ளிட்ட முக்கிய கருவிகள் மீட்கப்பட்டுள்ளன. விபத்து எப்படி நடந்தது என்பது குறித்து உண்மை அறிய இந்த கறுப்புப் பெட்டி மற்றும் கருவிகள் டில்லிக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன. விபத்துக்குள்ளான விமானம் இரண்டரை ஆண்டுக்கு முன் வாங்கப்பட்டது. அது முறையாக பராமரிக்கப்பட்டு உள்ளதால், விமானத்தில் இயந்திர கோளாறு ஏற்பட்டிருக்க வாய்ப்பு இல்லை என்று தெரியவந்துள்ளது. இதனால், தரை இறங்கும் போது விமானி செய்த தவறு அல்லது தொழில்நுட்பக் கோளாறு காரணமாகவே விமானம் விபத்துக்குள்ளாகி இருக்க வேண்டும் என்ற இரு கோணங்களில் விசாரணை நடக்கிறது. மங்களூர் விமான நிலையம் மலை உச்சியில் உள்ள சம தளத்தில் அமைந்துள்ளது. ஓடுபாதை தொடங்கும், முடிவடையும் இடத்தில் பெரிய பள்ளம் உண்டு. இந்தியாவில் உள்ள இடர்மிகுந்த விமான நிலையங்கள் பட்டியலில் மங்களூர்

(24ம் பக்கம் பார்க்க)

## விமானியா - தொழில்நுட்பக் கோளாறா விபத்துக்கு காரணம்?



## இந்தியாவில் நடந்த பாரிய விமான விபத்துக்கள் சில...!

07.07.1962 - சிட்னியிலிருந்து மும்பை வந்த அலிடாலியா நிறுவன விமானம் மலையில் மோதியது - 94 பேர் பலி.
21.06.1982 - மும்பை விமான நிலையத்தில் நடந்த விபத்து - 17 பேர் பலி
19.10.1988 - அகமதாபாத்தில் ஏர் இந்தியா - 124 பேர் பலி
14.02.1990 - பெங்களூரில் எயார் இந்தியா விமானம் விபத்தில் சிக்கியது - 92 பேர் பலி, 54 பேர் உயிர் தப்பினார்கள்.
16.08.1991 - இம்பால் நகரில் நடந்த ஏர் இந்தியா விமான விபத்து - 69 பேர் பலி
26.04.1993 - அவுரங்காபாத் விமான நிலையத்தில் நடந்த விபத்து - 55 பேர் பலி
17.07.2000 - அலையன்ஸ் நிறுவன விமானம் பாட்னா விமான நிலையத்தில் விபத்துக்குள்ளாகியதில் 60 பேர் பலி

## 13 ஆண்டுகளில் 400 விமான விபத்துக்கள்

அண்மைக்காலமாக உலகம் முழுவதும் விமான விபத்துக்கள் பெருகி வருகின்றன. கடந்த 13 ஆண்டுகளில் மட்டும் 400 விபத்துக்கள் நடந்துள்ளன. இதில் 6000ற்கும் மேற்பட்டவர்கள் பலியானார்கள் என்று போயிங் நிறுவன புள்ளி விவரத் தகவல் கூறுகிறன.

12.05.2010 - லிபியா தலைநகரான திரிபோலியில் நடந்த விமான விபத்தில் - 103 பேர் பலி, ஒரு 10 வயது சிறுவன் உயிர் தப்பினார்.
10.04.2010 - ரஸ்யாவில் போலந்து ஜனாதிபதியுடன் விபத்துக்குள்ளான விமானம் - 96 பேர் பலி
25.01.2010 - பெய்ரூட் லெபனானில் நடந்த விபத்தில் - 90 பேர் பலி
01.06.2009 - அட்லாண்டிக் பெருங்கடலில் பரிஸ் சென்ற எயார் பிரான்ஸ் விமானம் விழுந்தது - 228 பேர் பலி
30.06.2009 - கமோரோஸ் தீவு அருகே ஏமன் நாட்டு விமானம் விழுந்தது. - 153 பேர் பலி, ஒரு சிறுமி மட்டும் தப்பினார்.
15.07.2009 - ஈரான் நாட்டில் நடந்த விமான விபத்தில் 168 பேர் பலி
20.08.2008 - ஸ்பெயின் நாட்டை சேர்ந்த விமானம் மட்ரிட் நகர விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டபோது விழுந்து நொறுங்கியது - 154 பேர் பலி, 18 பேர் உயிர்தப்பினர்.

### ஏனைய சில அதிக உயிரழப்புக்களை ஏற்படுத்தி விபத்துக்கள்

2008ல் கஜகஸ்தானில் நடந்த 2 விமான விபத்துக்களில் 117 பேர் பலி.
2007ல் பிரேசில் நாட்டில் நடந்த விமான விபத்தில் 119 பேர் பலி.
2006ல் உக்ரைன் நாட்டில் நடந்த 3 விமான விபத்துக்களில் 450 பேர் பலி
2006ல் ஜுலையில் ரஷ்யாவில் நடந்த விமான விபத்தில் 170 பேர் பலி.
2006ல் பிரேசில் நாட்டில் நடந்த விபத்தில் 154 பேர் சாவு.
2005 ஒகஸ்ட் மாதத்தில் கொலம்பியாவில் நடந்த விமான விபத்தில் 160 பேர் பலி.
2005 ஒகஸ்ட் இந்தோனேசியா நாட்டில் நடந்த விமான விபத்தில் 143 பேர் பலி
2005 பிப்ரவரியில் காபூலில் மலை மீது விமானம் மோதிய விபத்தில் 104 பேர் பலி.
2003 பிப்ரவரியில் ஈரான் நாட்டில் இராணுவத்தினரை ஏற்றிச் சென்ற விமானம் விபத்தில் சிக்கியதில் 275 பேர் பலி
2002ல் அல்ஜீரியா விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட விமானம், மேலே எழும்பிச் செல்ல முடியாமல் எரிந்து விழுந்ததில் 100 பேர் பலி.
2002ல் தாய்வான் அருகே சீன விமானம் விழுந்து நொறுங்கியதில் 225 பேர் பலி
2002ல் தென்கொரியாவில் சீன விமானம் மலையில் மோதிய விபத்தில் 128 பேர் பலி.
2001ல் நியூயோர்க் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட போது, ஓடு தளத்தில் வெடித்ததில் 265 பேர் பலி.
2001 ஜுலை சைபீரியா காட்டு பகுதியில் விழுந்து தீப்பிடித்து 145 பேர் பலி.

## விமானத்தின் கறுப்பு பெட்டி சில தகவல்கள்

விபத்துக்குள்ளான விமானம் குறித்த முழு விபரங்களையும் அறிவதற்கு உதவியாக இருப்பது கறுப்பு பெட்டி. விமானத்தின் விவரங்கள் பதிவு சாதனம் (எப்.டி.ஆர்.) என்பதே கறுப்பு பெட்டி` என பொதுவாக அழைக்கப்படுகிறது. இந்த பெட்டியின் மீது பல அடுக்குகளாக எக்கு தகடுகள் சுற்றப்பட்டு இருக்கும். அதனால், விமானம் மோதினாலோ, தீப்பிடித்தாலோ, தட்பவெப்ப நிலையில் அதிகபட்ச மாற்றம் ஏற்பட்டாலோ எந்த பாதிப்பும் ஏற்படாது. மேலும், எத்தகைய விபத்து ஏற்பட்டாலும் பாதுகாப்பான பகுதியாக கருதப்படும் விமானத்தின் வால் பகுதியில் இந்த பெட்டி பொருத்தப்பட்டு இருக்கும். இவ்வளவு பாதுகாப்பான பகுதியில் அமைந்துள்ள கறுப்பு பெட்டியில் விமானம் பறந்த உயரம், வேகம், நேர்குத்து இயக்கம், விமானத்தின் இடம் என விமானத்தை பற்றிய உண்மையான நிலவரங்கள் பதிவாகிக் கொண்டு இருக்கும். எனவே, விபத்து நடந்தபோது நிலவிய சூழ்நிலையை அறிந்து கொள்ள முடியும். இது தவிர, கறுப்பு பெட்டியின் மற்றொரு பிரிவில் ஒலிப்பதிவு கருவியும் உண்டு. விமானத்தில் உள்ள விமானிகளின் அறையில் நடந்த உரையாடல், அங்கு ஏற்படும் ஒலிகள், விமானிகளின் குரல்கள், இயந்திரத்தின் இரைச்சல் என அனைத்து வித சப்தங்களும் அதில் பதிவாகி விடும். அவுஸ்திரேலியாவின் மெல்பர்ன் நகரில் உள்ள விமான ஆராய்ச்சி ஆய்வு கூட விஞ்ஞானி டேவிட் வாரன் என்பவர், 1953ம் ஆண்டு கறுப்பு பெட்டியை கண்டு பிடித்தார். உலகிலேயே விமானத்தில் கறுப்பு பெட்டி பொருத்துவதை முதன் முதலில் கட்டாயமாக்கியது, அவுஸ்திரேலிய நாடு. 1960ம் ஆண்டில் அது அமுலுக்கு வந்தது. கறுப்பு பெட்டி` என அழைத்தாலும் அதன் உண்மையான நிறம் ஆரஞ்சு என்பது குறிப்பிடத்தக்கது. விபத்து நடந்தால் அதனை எளிதாக அடையாளம் காண்பதற்காக அந்த பெட்டியின் மீது சிவப்பு அல்லது ஆரஞ்சு நிறத்தில் மை பூசுகின்றனர்.